# <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| MCOP.No.28 /2021 | Date : 24.07.2026 | PW 1 |
|---|---|---|
| Name: குமார் | த/பெ. முத்துசாமி | |

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். எந்த வருடம் விபத்து நடந்தது என்றால் 24.02.2017 ந்தேதி விபத்து நடந்தது. எனதுசொந்த ஊர் எதுவென்றால் நாகமரை, நெருப்பூர் ஆகும். விபத்து நடந்த இடம் மேட்டூர் MAM பள்ளிக்கு அருகில் உள்ள வேகத்தடை அருகே நடந்தது. எப்படி விபத்து நடந்தது என்றால் என் வண்டிக்கு முன்னால் டேங்கர் லாரி போய்க்கொண்டிருந்தது. ஸ்பீடு பிரேக்கரில் லாரி ஏறி இறங்கும்போது சடனாக பிரேக் போட்டதால் மேற்படி டேங்கர் லாரிக்கு பின்னால் வந்த என் வண்டி லாரியின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. முன்னால் சென்ற டேங்கர் லாரிக்கும் நான் சென்ற வண்டிக்கும் இடையே எவ்வளவு இடைவெளி இருந்தது என்றால் சுமார் 100 அடி இடைவெளி இருந்தது. நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. டேங்கர் லாரியை ஒட்டியே நான் பின்னால் சென்றதால்தான் மேற்படி லாரி பிரேக் போட்டவுடன் என் வண்டி அதன் மீது மோதியது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை யார் மீது பதிவு செய்யப்பட்டது என்றால் டேங்கர் லாரி ஓட்டுநர் மீதுதான் போடப்பட்டது. விபத்து நடந்து 6 நாட்கள் கழித்துதான் நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தனர். போலிசார் என்னை விசாரணை செய்த பின்பு முதல் தகவல் அறிக்கையை Mistake of facts என முடிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்தில் எனக்கு எங்கு அடிப்பட்டது என்றால் என்னுடைய தாடை, பின்மண்டை, இடது கால் தொடை ஆகிய இடங்களில் அடிப்பட்டது. விபத்திற்கு காரணமே என்னுடைய அஜாக்ரதையாலும், கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. டேங்கர் லாரிக்கும் நான் சென்ற வண்டிக்கும் போதிய இடைவெளி இல்லாமல் நான் சென்றதால்தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. விபத்து சமயத்தில் நான் தலைகவசம் அணிந்துதான் சென்றேன். இந்த விபத்திற்கு காவல்துறையினர் என் மீதுதான் தவறு என்று முதல் தகவல் அறிக்கை முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நஷ்டஈடு வழங்க 2ம் எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் ஓட்டிச்சென்ற passion pro வாகனம் ஓட்டிச்சென்றேன் விபத்து சமயத்தில் அந்த வண்டிக்கு

இன்சூரன்ஸ் உள்ளது. என்னுடைய வாகனத்தின் இன்சூரன்ஸ் கம்பெனியை இந்த வழககில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு காரணமே நான் தான் என்பதால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து எனக்கு நஷ்டஈடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் நஷ்டஈடு கேட்கவேண்டும் என்றால் என்னுடைய வாகனத்தின் இன்சூரன்ஸ் கம்பெனியைதான் கேட்க வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–குமார்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.